**காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் - 2021**

----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயத்தினை மறுப்பதற்கான அடிப்படைப் பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பேணப்படுகின்ற கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களின் மீது கணக்காய்வாளரின் அறிக்கையினை வழங்குவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயம் தெரிவிப்பதனை மறுப்பதற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| குறிப்பிட்ட நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை. | முகாமைத்துவத்தின் கருத்துரைகள. | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பந்திக்மைய நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது இடமளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் நீங்கலாக வருமானம் மற்றும் செலவினம் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படக் கூடாத போதிலும் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட சட்டக் கட்டண செலவினங்களான ரூபா.24,137,438 இற்கு எதிராக ஆணைக் குழுவுக்கு சொந்தமான காணிகளின் விற்பனையின் போது கொள்வனவாளரிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா.2,717,462 ஆன தொகை ஈடுசெய்யப்பட்டிருந்தது. | இதுவரையிலும் காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் பின்பற்றப்பட்ட நடைமுறையானது சட்ட கட்டணங்களை செலுத்தும் போது அந்த செலுத்தப்பட்ட செலவினம் சட்ட செலவின கணக்கிற்கு வரவு வைப்பதற்கும் காணிகளை பெறுநர்களிடமிருந்து ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் சட்ட செலவினங்களை மீளளிப்பு செய்து குறித்த வருமானம் சட்ட செலவிக கணக்கிற்கு செலவு வைத்தலும் ஆகும். தங்களின் வழிகாட்டலுக்கமைய 2022 நிதியாண்டுக்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானம் மற்றும் செலவினங்கள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்படக்கூடாது. |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 01 இன் 99 ஆம் பந்தியின் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளவாறு ஏனைய விதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பம் நீங்கலாக குறித்த | 2022 ஆம் ஆண்டில் காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது காணிகளை விற்பனை செய்தமையால் மற்றும் சுவீகரிப்பு வருமானத்தில் கிடைக்கும் அனைத்து வருமானங்களும் விரிவான வருமான | அனைத்து வருமானங்களும் விரிவான வருமான கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதியில் இனங்காணப்பட்ட அனைத்து வருமானங்களும் விரிவான வருமானக்கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் காணி விற்பனை வருமானத்தின் 40 சதவீதமான ரூபா.158,546,289 ஆன பெறுமதி விரிவான வருமானக் கூற்றில் பதிவு செய்யப்படாது நேரடியாக மூலதன ஒதுக்கத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | கூற்றில் காண்பிக்கப்பட்டு அதிலிருந்து ஒதுக்கமொன்றாக மாற்றப்படுவதுடன் காணி சுவீகரிப்பு வருமான பெறுமதியில் 40% அளவு ஒதுக்க கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 9 ஆம் பந்திக்கமைய 3 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான காலத்தில் முதிர்வடையும் குறுங்கால முதலீடுகள், காசு பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமனானவையாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக நிலவிய ரூபா.1,334,716,557 கூட்டுத்தொகையான குறுங்கால வைப்புக்கள் மற்றும் திறைசேரி பட்டியல்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட மூன்று மாதங்கள் அல்லது அதற்கு குறைவான காலத்தினுள் முதிர்வடையும் ரூபா.209,963,420 ஆன குறுங்கால முதலீடுகள் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் மீதியினுள் உள்ளடக்கப்பட்டிராத காரணத்தால் வங்கி குறுங்கால வைப்புகள் மற்றும் திறைசேரி பத்திரங்களில் முதலீட்டுப் பெறுமதி அந்த அளவினால் அதிகரித்தும் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் பெறுமதியானது அந்த அளவினால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 03 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான காலத்தில் காசு மற்றும் காசுக்கு சமனான அனைத்து சொத்துக்களும் காசு மற்றும் காசுக்கு சமமான சொத்துக்களாக கருதி 2022 ஆம் ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூன்று மாதங்கள் அல்லது அதற்கு குறைந்த காலத்தில் முதிர்வடையும் முதலீடுகள் காசு பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமனானவையாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 100 மற்றும் 105 ஆம் பந்திகளுக்கமைய மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நிகழத்தக்க பொறுப்புக்கள் | 2022 ஆம் ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கீட்டு பதிவுகளுக்கு குறித்த நிகழத்தக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்குரிய விரிவான விபரங்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழ்த்தக்க சொத்துக்கள் தொடர்பில் தொடர்புடைய நியமத்திற்கமைய |

| | | |
|---|---|---|
| மற்றும் சொத்துக்கள் தொடர்பில் விரிவான விபரம் ஒன்று நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ள படியாக மதிப்பீடு செய்யப்பட்ட கணக்கு கொள்கைகளில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா.750 மில்லியனான நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் ரூபா.1,491 மில்லியனான நிகழத்தக்க சொத்துக்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | விரிவான விபரங்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படுவதாக 1.6.2 ஆம் இலக்க கணக்கீட்டு கொள்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் முதலீட்டு வருமானம், காணிக் குத்தகை வாடகை, அதன் அடிப்படையில் அறவிடப்படும் மிகை கட்டணம் மற்றும் கருங்கல் குத்தகை வருமானம் நீங்கலாக காணி சுவீகரிப்பு நட்ட ஈடுகள், காணி பரிமாற்றல் கட்டணங்கள், காணி விற்பனை வருமானங்கள், மர விற்பனை வருமானங்கள், மண் விற்பனை வருமானம் போன்ற ஏனைய 19 வருமான வகைகளின் கீழ் சேகரிக்கப்பட்ட ரூபா.440,135,525 கூட்டுத் தொகையான வருமானம் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியமையால் அதற்கமைய பெறவேண்டிய காணிகள் குத்தகை வருமானம், பெறவேண்டிய முதலீட்டு வருமானம், பெற வேண்டிய கருங்கல் வருமான கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. திட்டவட்டமாக பெறவேண்டியவையாக இனங்காணுவதற்கு சிரமமான காணிகளை சுவீகரிக்கும் நட்டஈடு மற்றும் வட்டி, நிர்வாகக் கட்டணங்கள், விண்ணப்ப கட்டணங்கள், ஏலமிடல் வருமானம், தென்னை வருமானம், ஆணைக்குழு கட்டணங்கள், மரபணு வருமானம், கடிதங்களை வழங்கும் வருமானம், அச்சிடப்பட்ட பிரதிகளை வழங்குதல், செயற்திட்ட கட்டணங்கள், பதிவு கட்டணங்கள், பலகை விற்பனை வருமானம், பரிமாற்றல் வருமானம், மண் விற்பனை மற்றும் லிந்துல பங்களாவின் வருமானம் போன்ற வருமான தொகுதிகள் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளன. காணி விற்பனைகளுக்குரிய மதிப்பீட்டு அடிப்படை காணிகளை ஒப்படைக்கும் போது அறவிடப்பட | கணக்கிட்டு கொள்கைக்கமைய நிதிக்கூற்றுகள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |

வேண்டிய தொகையை தயாரித்தவாறு உள்ளதுடன் எதிர்காலத்தில் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1972 ஆம் ஆண்டில் ஆணைக்குழு தாபிக்கப்பட்ட திகதி முதல் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்குரிய, காணிகளின் ஏக்கர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு காணியும் அமைந்துள்ள இடங்கள், யாரால் சுவீகரிக்கப்பட்டது என்பது, தற்போது உரித்து கையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்கள் மற்றும் உரிய வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் காணி அகற்றல்களுக்குரிய அனைத்து விபரங்கள் தொடர்பிலான முழுமையான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு ஒன்று நிறுவனத்தினால் பராமரிக்கப்பட்டிராததுடன் அது தொடர்பில் பயன்பாட்டு ஆவணங்களின் மூலம் தெளிவுபடுத்துவதற்கு நிறுவனம் தவறியுள்ளது. அதற்கமைய நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா.676,169,345 தொகையான சுவீகரிக்கப்பட்ட காணிகளின் நிலவுகை மற்றும் பெறுமதியிடல் ஆகியவற்றின் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது. | முறையாக மற்றும் உரிய காலத்தில் நாளதுவரையாக்கப்பட்ட காணிகள் பதிவேடு ஒன்று 1972 ஆம் ஆண்டின் காணிகள் சுவீகரிக்கப்பட்ட சந்தர்ப்பம் முதல் ஆணைக்குழு தயாரித்திராத காரணத்தால் இப்பிரச்சினை உருவாகி உள்ளது. கடந்த ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் விதத்தில் 1975 ஆம் ஆண்டு காணிகளின் பெறுமதி ரூபா.890,959,772 ஆக காணப்பட்டதுடன் பின்னைய வருடங்களில் ஏற்பட்ட காணி அகற்றல்களின் பின்னர் 2006 ஆம் ஆண்டில் காணிகளின் பெறுமதி ரூபா.676,169,346 ஆக காண்பிக்கப்படுகிறது. அது முதல் இதுவரையிலும் அப்பெறுமதி வேறுபடாது காணப்படுகிறது. காணிகள் பதிவேடொன்றினைத் தயாரித்தல் இதுவரையிலும் மேற்கொள்ளப்படுகின்றமையால் எதிர்காலத்தில் இந்த சிக்கல் தீர்க்கப்படும். | ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பிலான விபரங்கள் உள்ளடங்கிய பதிவேடொன்று பராமரிக்கப்பட வேண்டியதுடன் காணிகளின் பெறுமதியை நாளதுவரையாக்கி நிதிக்கூற்றுக்களின் மூலம் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறு சீரமைப்பு அதிகாரச் சட்டத்திற்கமைய தோட்டச் சங்கங்களில் மற்றும் நபர்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக செலுத்த வேண்டிய நட்டஈடு தொங்கல் (கட்டம் - I மற்றும் II) கணக்கில் காணப்படும் ரூபா.215,914,519 கூட்டுத் தொகையான மீதி மீளாய்வாண்டின் இறுதி அளவில் | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கட்டம் I மற்றும் கட்டம் II இன் கீழ் செலுத்த வேண்டிய நட்டஈடு மற்றும் நட்டஈட்டு வட்டி கணக்கு தொடர்பில் பொழிப்பாக்கப்பட்ட பதிவொன்று முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொங்கல் கணக்கு மீதியை இனங்கண்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பொறுப்புக்களின் தன்மை நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்ப்பனவு செய்யப்பட்டிராததுடன் பொறுப்புகளின் தன்மை தொடர்பில் பொழிப்பாக்கப்பட்ட விபரங்கள் கணக்குப்பதிவுகளின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | ஆணைக்குழுவின் வருமானப் பிரிவினால் பேணப்படும் காணி குத்தகை வாடகை பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள 09 நிறுவனங்கள் மற்றும் 03 நபர்களுக்குரிய ரூபா.13,307,625 ஆன குத்தகை வாடகை வருமானம் கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்தது. | தற்போது வருமான பிரிவில் பேணப்படும் குத்தகை பேரேடு குத்தகை காலப்பகுதியில் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு அதற்கமைய சமப்படுத்தப்படும். அதற்கமைய கணக்கீட்டு காலப்பகுதிக்குரிய சமப்படுத்தல் இடம்பெறவில்லை. எனினும் 2022.12.31 ஆம் திகதியில் உள்ளபடியாக கணக்கீட்டு காலப்பகுதிக்குரிய குத்தகை பேரேட்டினை சமப்படுத்தி அதற்கமைய பெறவேண்டிய குத்தகை வருமானம் இறுதி கணக்கு அறிக்கைகளிலும் உள்ளடக்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குத்தகை வாடகை வருமானத்தை சரியாக கணக்கு வைக்க வேண்டும். |
| (ஈ) | 19 கருங்கல் குத்தகையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளபடியாக பெற வேண்டியதாக காணப்பட்ட ரூபா.61,957,870 ஆன நிலுவை குத்தகை தொகையில் மீளாய்வாண்டில் கிடைத்த குத்தகை தொகை ரூபா.3,735,200 ஆக காணப்பட்டதுடன் நிலுவை குத்தகை பதிவழித்தல் ஒன்று இடம்பெறாதமையால் மீளாய்வாண்டின் இறுதி அளவிலும் பெறவேண்டிய கருங்கல் குத்தகை வருமானம் ரூபா.58,222,670 ஆக காணப்பட வேண்டிய போதிலும் அது தவறுதலாக ரூபா.13,237,050 ஆக நிதிக்கூற்றுகளில் அறிக்கையிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக பெறவேண்டிய கருங்கல் குத்தகை வருமானம் ரூபா.44,985,620 இனால் குறைவடைந்திருந்த போதிலும் அதற்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட பிரிவினுள் கருங்கல்கள் தொடர்பில் முறையான வரி பேரேடு ஒன்று பேணிச் செல்லப்பட்டிராதுடன் இது தொடர்பில் பல சிக்கல்கள் ஏற்பட்ட காரணத்தால் பேரேட்டினை தயாரித்தலில் தாமதம் ஏற்பட்டுள்ளது. விசேடமாக ஆரம்பம் முதலே கருங்கல் குத்தகைக்கு வழங்கப்படும் போது அறவிடப்படும் கட்டணங்கள் அவ்வப்போது மாற்றமடைந்தமை பிரதானமாக தாக்கம் அளித்துள்ளது. எவ்வாறான போதிலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மீண்டும் கற்கையொன்றினை மேற்கொண்டு உரிய முறையில் கோவைகளை தயாரித்து சரியான குத்தகை பேரேடு ஒன்றினை தயாரிப்பதற்கு வருமானப் பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ளதுடன் அதற்கு தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டு தற்போது அந்தப் பேரேடு தயாரிக்கப்பட்டவாறுள்ளது. அதற்கமைய ஏற்பட்டுள்ள வழுக்கள் குத்தகை பேரேட்டினை நாளதுவரையாக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய வருமானங்களை சரியாக கணக்கு வைக்க வேண்டியதுடன் 2022 ஆம் ஆண்டில் கணக்குகளின் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டுக்கு முன்னர் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்படாத 12 கருங்கல் குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.136,773,278 ஆன தொகை ஆண்டின் வருமானத்திற்கு உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் மொத்த வருமானமாக ரூபா.116,694,834 மாத்திரம் நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் கருங்கல் குத்தகை வருமானம் ரூபா.20,078,444 இனால் குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் புதிய 12 குத்தகையாளர்களுக்கு கருங்கல் காணிகளை குத்தகைக்கு வழங்குதல் இடம்பெற்றிராததுடன் அப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகையாளர்கள் அதற்கு முன்னைய வருடங்கள் முதலே தமது செயற்திட்டத்தினை நடாத்திச் சென்றுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் இந்த குத்தகையாளர்களின் ஆவணங்கள் கைவிடப்பட்டுள்ளதுடன் இதுவரையிலும் அந்த கோவைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் அந்த குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு மாவட்ட அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பணம் செலுத்தாத குத்தகையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறான போதிலும் இந்த குத்தகை வருமானம் கைவிடப்பட்டமை குத்தகை பேரேட்டினை தயாரித்த பின்னர் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய வருமானம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டியதுடன் 2022 ஆம் ஆண்டின் கணக்குகளின் மூலம் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 12 காணி குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.101,255,194 ஆன நிலுவை குத்தகை மீதி மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த 12 குத்தகையாளர்களுக்கு உரியதாக பெறவேண்டிய குத்தகை வருமானம் 2021.12.31 ஆம் திகதியின் பின்னர் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால் தற்போது பேரேட்டில் உள்ளடக்கப்பட்டு குத்தகையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2022.12.31 ஆம் திகதியில் உள்ளபடியாக பெற வேண்டிய குத்தகை பணங்களுக்கு உள்ளடக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை மீதிகளை சரியாக கணக்கு வைக்க வேண்டியத்துடன் 2022 ஆம் ஆண்டின் கணக்குகளின் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 09 காணிக் குத்தகையாளர்களுக்கு உரியதாக ஆணைக்குழுவின் வருமான பிரிவினால் பேணிச் செல்லப்படும் மீதி மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதி ஆகியவற்றுக்கு இடையே ரூபா.2,827,941 ஆன வேறுபாடு ஒன்று நிலவியது. | 2021.12.31 ஆம் திகதியில் உள்ள படியாக பெற வேண்டிய குத்தகை வருமானம் பதிவேட்டினை தயாரிக்கும் போது தற்காலிகமான திருத்தங்களின் அடிப்படையில் வருடாந்த குத்தகைத் தொகை கணிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களை காணக்கூடியதாக இருந்தது. பின்னர் கணக்காய்வு பிரிவிற்கு குத்தகை பேரேட்டினை வழங்கும் சந்தர்ப்பத்தில் பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீடு கிடைக்கப்பெற்றிருந்தமையால் அதற்கமைய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச் சீராக்கங்களின் அடிப்படையிலும் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்டிருந்த மீதி மற்றும் குத்தகை பேரேட்டின் மீதி மாற்றம் அடைந்துள்ளது. | நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்படும் மீதிகள் குறித்த பயன்பாட்டு பதிவேடுகளில் பெறுமதிகளுடன் சமனாக காணப்பட வேண்டும். |
| (ஏ) | களுத்துறை மாவட்டத்தின் அம்ரிதா அப்பரல் (தனியார்) கம்பெனியிடமிருந்து பெற வேண்டியதாக முன்னைய வருடங்களில் இனங்காணப்படாத ரூபா.1,851,852 பெறுமதியான காணி குத்தகை தொகை மீளாய்வாண்டில் கிடைத்திருந்ததுடன் அது கடந்த வருடங்களின் இலாபத்திற்கு சீராக்குவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் வருமானம் ஒன்றாக பதிவு செய்யப்பட்ட காரணத்தால் அந்த பெறுமதியால் காணி குத்தகை வருமானம் அதிகரித்து பதிவு செய்யப்பட்டிருந்தது. | குத்தகை பேரேட்டிற்கமைய 2021.01.01 ஆம் திகதியில் உள்ளபடியான ஆரம்ப மீதி ரூபா.4,142,819 ஆகும். 2020 டிசம்பர் மாதம் ரூபா.2,000,000 தொகைக்கு உரிய காசோலைகள் அம்ரிதா அப்பரல் (தனியார்) கம்பெனியிலிருந்து கிடைத்திருந்தது. இந்த காசோலை உரிய குத்தகை தொகை ரூபா.1,851,851 ஆகும். இந்த குத்தகைத் தொகை கழிக்கப்பட்டதன் பின்னர் (4,142,819 – 1,851,851) 2021.01.01 ஆம் திகதியில் உள்ளபடியான மீதியாக ரூபா.2,290,967 தொகை இறுதி கணக்கு அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த காசோலைக்குரிய பற்றுச்சீட்டு 2021.01.11 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. (காசோலைக்கு திகதி இடப்பட்டிருந்தமையால்) தற்போது இந்த நிறுவனத்திற்குரிய குத்தகை தொகை கிடைத்துள்ளது. | மீளாய்வாண்டின் வருமானம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா.2,886,619,681 பெறுமதியான பெறவேண்டிய கருங்கல் குத்தகை, காணிக் குத்தகை, வியாபாரம் மற்றும் | காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்குரிய வருமான பிரிவினால் பேணப்படும் 18 மாவட்டங்களின் குத்தகை பேரேடுகள் | கணக்காய்விற்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எழுத்து மூல |

| | | |
|---|---|---|
| ஏனைய பெறவேண்டிய மீதிகள் மற்றும் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பேரேட்டு கணக்கு, மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் போன்ற தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022.09.05 ஆம் திகதி வரையிலும் மின்னஞ்சல் ஊடாக அரச கணக்காய்வு பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போது முறையான கருங்கல் பேரேடு ஒன்று பேணப்பட்டிராமையால் கருங்கல் பேரேட்டு கணக்கு தயாரிக்கப்பட்டவாறுள்ளது.<br>கடன்பட்டோரான ஹதவிம அதிகார சபை, இலங்கை பெருந்தோட்ட கூட்டு தாபனம், ஜனதா பத்தோ அபிவிருத்தி சபை, காணிகள் அமைச்சு, தேசிய கடதாசி கம்பெனி ஆகியவற்றுக்காக மற்றும் கடன்கொடுத்தோரான மகாவலி அதிகார சபை, சட்டமா அதிபர் திணைக்களம் போன்ற நிறுவனங்களுக்கு 2022.01.24 ஆம் திகதி மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நிலவிய ரூபா.2,987,753,606 கூட்டுத்தொகையான வியாபாரம் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்ட 07 அரச நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய 30 வருடங்களை கடந்த ரூபா.2,127,271,837 தொகை மற்றும் 10 வருடங்களை விஞ்சிய ரூபா.8,354,409 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆணைக்குழுவிற்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை செலுத்துமாறு அறிவித்த போதிலும் அந்தப் பணம் எந்த நிறுவனத்தினாலும் ஆணைக்குழுவிற்கு செலுத்தப்படவில்லை. ஹதவிம அதிகார சபை, இலங்கை பெருந்தோட்ட கூட்டு தாபனம், ஜனதா வத்து அபிவிருத்தி சபை, காணிகள் அமைச்சு ஆகிய நிறுவனங்கள் எமக்கு கடந்த பல வருடங்களாக காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் நிதி கூற்றுக்களில் ஆணைக்குழுவிற்கு பெற வேண்டியதாக உள்ள பெறுமதி அவர்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய பெறுமதியாக காண்பிக்கப்படவில்லை என்பதை எமக்கு அறிவித்துள்ளனர்.<br>கூட்டுறவு சங்க கம்பெனி, தேர்தல்கள் காணிகள் மறுசீரமைப்பு கூட்டுறவு சங்கங்கள் கம்பெனி, தேசிய கடுதாசி கம்பெனி ஆகிய நிறுவனங்கள் தற்போது செயற்பாட்டில் இல்லாமையால் காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு அறவிட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு முடியாத நிலை காணப்படுகிறது. இந்த தீர்ப்பனவுகள் தொடர்பில் வரிசை அமைச்சு மற்றும் உரிய ஏனைய அரச நிறுவனங்களுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. | அரச நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய பழைய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்கள் இரண்டிலும் அமைந்துள்ள 08 காணி துண்டுகள் குத்தகைக்கு எடுத்த தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா.2,311,017 தொகை 22 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட போதிலும் குறித்த குத்தகை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | களுத்துறை மாவட்டத்தின் பரோடேல் தோட்டத்தின் 07 ஆம் இலக்க காணித்துண்டு கே.ஏ.வசந்த எனும் பெயருடையவருக்கு உரித்துறுதி வழங்கப்பட்டுள்ளது. எம்.டி.எஸ்.பிரியந்த என்னும் பெயர் காணி வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை. மில்லாவ வத்தையில் கே.ஏ.பாலித எனும் நபர் வசிக்கின்றார். அதற்குரிய பணத்தை செலுத்துமாறு குறித்த தரப்பினருக்கு அறிவித்துள்ள போதிலும் கொடுப்பனவு மேற்கொள்ளுவது சிரமமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இலிம்ப தோட்டத்தில் வதியும் பி.திலகசிரி மற்றும் டி.ஆர்.ஹேமலதா ஆகியோருக்கு உரிய உரித்துறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. எம்.எஸ்.டி.சேனாதிர என்பவர் தொடர்பில் எந்த தகவலும் கோவைகளில் குறிப்பிடப்படவில்லை. கம்பஹா மாவட்டத்தின் கஹடஹாவத்த எனும் இடத்தில் பீ.எல்.சரசந்திர என்பவர் தொடர்பில் தகவல்களை கண்டறிய முடியாதுள்ளது. மேலும் பாலுவத்த காணியின் எம்.டி.மேரி பன்டா எனும் நபரிடமிருந்து ரூபா.112,322 ஆன தொகை அறவிடப்பட்டுள்ளது. | குத்தகையாளரினால் உடன்படிக்கையின் விதிகள் அல்லது நிபந்தனைகள் மீறப்பட்டால் காணி மறுசீரமைப்பு அதிகார சட்டத்தின் 24(2) பிரகாரம் சாட்டுதல் இரத்துச் செய்யப்பட வேண்டியதுடன் ஏனைய குத்தகையாளர்களுக்கு நிலுவை பணத்தை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபா.14,080,850 ஆன காணிகள் குத்தகை வாடகை முற்பணக் கணக்கின் மீதியில் உள்ளடக்கப்பட்ட 269 நபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா.11.215,815 ஆன முற்பணங்கள் 16 நிதியாண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த காணிகளை சட்டரீதியாக குத்தகைக்கு வழங்குவதற்கோ முற்பணத்தை மீள தீர்ப்பனவு செய்வதற்கோ ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2002 - 2004 காலப்பகுதியில் சாட்டப்பட்ட 219 காணிகளுக்கு உரிய 11,942 ஏக்கர்களுக்கு உரிய காணிகளின் அளவில் 1,156 ஏக்கர்கள் தற்போது சிறந்த முறையில் பயிரிடப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளதுடன் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு வரைபாக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் 2022.04.20 ஆம் திகதி காணிகள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பின்னர் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் குறித்த குத்தகையாளர்கள் சுற்றுலா மற்றும் காணிகள் அமைச்சுக்கு வரவழைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது. இவ்விடயங்கள் தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் அதற்கமைய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது. | குறித்த காணிகளை சட்டரீதியாக குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது முற்பணங்களை மீள தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பயிர் செய்யப்படும் காணிகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபா.11,392,992 தொகையான காணி விற்பனை முற்பண மீதியின் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன் கொண்டு வரப்படும் ரூபா.10,377,992 ஆன மீதி உள்ளடங்கி இருந்த போதிலும் அவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்கு வைக்கப்பட்டுள்ள இந்த காணிகளின் விற்பனை முற்பணத் தொகை அதிகமாக 2002 - 2004 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் ஆவதுடன் அந்த காணி கொள்வனவுகள் தொடர்பில் இதுவரையிலும் அமைச்சரவையின் குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் இதனை தீர்ப்பனவு செய்யப்படாத முற்பண கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விற்பனை முற்பண மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவை | | | |
| (i) நி.பி.371(5) | செயல் நிமித்த உப கட்டுநிதியானது குறித்த பணி நிறைவடைந்து 10 நாட்களினுள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 19 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா.709,275 பெறுமதியான உபகட்டுநிதியை தீர்ப்பதற்கு 55 முதல் 263 நாட்கள் வரையிலான கால வீச்சில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படாது இருப்பதற்கு வழங்கப்படும் முற்பணங்களை வழங்கி 07 நாட்களினுள் தீர்ப்பனவு செய்வதாக முற்பணத்தை பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் 07 நாட்களினுள் தீர்க்கப்படாதுவிடின் குறித்த மாதம் அல்லது அதற்கடுத்த மாதம் அவரின் தனிப்பட்ட சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய முறையில் முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நி.பி.751 | அனைத்து பண்ட பெறுவனவுகள் மற்றும் விநியோகம் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவிற்கு தொலைபேசி கட்டமைப்பு ஒன்றினைத் தாபிப்பதற்கு உரியதாக ரூபா.245,700 | இதுவரையிலும் இந்த 45 தொலைபேசிகளுக்கு பெறுவனவு மற்றும் விநியோகம் முறையாக பதிவேட்டில் உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த தொலைபேசி இருப்பு மதிப்பீட்டு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நி.பி.751 இன் ஏற்பாடுகளுக்கு அமைய பொருள் பெறுபவனவுகள் மற்றும் விநியோகம் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலவிடப்பட்டு மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 05 டிஜிட்டல் தொலைபேசிகள் மற்றும் 40 பொதுவான தொலைபேசிகள் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிராததுடன் இந்த உபகரணங்கள் பயன்படுத்தும் அல்லது பொறுப்பில் வைத்திருக்கும் உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியல் கோவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதி கோவையின் II அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தி | பதிற்கடமை நியமனங்கள் ஆனது நிரந்தர நியமனம் ஒன்றினை மேற்கொள்ளும் வரை தற்காலிக மாற்றீடாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் (காணி) பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் செயலாளர்) ஆகிய மூன்று பதவிகளுக்கு பதில் கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமித்து 05 முதல் 12 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் நிரந்தர அடிப்படையில் குறித்த பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ் உத்தியோகத்தர்கள் அந்த பதவிகளுக்காக தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதுடன் நிரந்தர அடிப்படையில் உள்ளக ஆட்சேர்ப்பிற்கு உரிய அங்கீகாரங்களை பெற்றுக் கொள்வதற்கு 2022.11.14 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களுக்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2006 ஏப்ரல் 10 ஆம் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் (ஆ) பிரிவு | சுற்றறிக்கைக்கு அமைய பதவிகளை புதிதாக ஏற்படுத்துவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அல்லாது மீளாய்வாண்டின் இறுதி அளவில் சுற்றுலா விடுதியின் பொறுப்பாளர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார். | 2020.12.09 ஆம் திகதி இடம்பெற்ற 741 ஆம் ஆணைக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நுவரெலியா சுற்றுலா விடுதிக்காக இந்த ஊழியர் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன் புதிய பதவிகள் அங்கீகரிக்கப்படவில்லை எனின் அந்நபர் அப்பதவியிலிருந்து அகற்றப்படும் எளிமை உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் கடமை தேவைப்பாடுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 17 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் | சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பதிவேடு ஒன்றினை தயாரித்தல், ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் | காணிகள் பதிவேட்டினை தயாரிக்கும் பணிகள் கட்டம் 03 இன் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன் முதலாவது கட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டாவது மற்றும் மூன்றாம் கட்டங்கள் இடம்பெற்றவாறு உள்ளன. | பொது முயற்சிகள் தொடர்பிலான கணக்குகள் குழுவின் கட்டளைக்கமைய பிரச்சனைகளை தீர்ப்பதற்கு மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| பரிந்துரைகள் | இன்றி 2018 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளப்பட்ட மேலதிக பதவியணி தொடர்பில் முறையான உள்ளக விசாரணை ஒன்றினை நடாத்தி அதற்கமைய மேலதிக பணிகளை முன்னெடுத்தல், 2002 - 2004 காலத்தில் முறையான அங்கீகாரம் இன்றி கையளிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுத்தல், ஆணை குழுவிற்கு சொந்தமான காணிகளில் பெறுமதி மதிப்பிடல் பணிகளை மேற்கொள்ளல், கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த பிரச்சனைகளை தீர்த்து 06 மாதங்களினுள் அறிக்கை இடுதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | ஆண்டறிக்கைகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தற்போதைய நிலைமையில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு அமைச்சரவை பத்திர வரைபொன்று தயாரிக்கப்பட்டு 2022.10.17 ஆம் திகதி சுற்றுலா மற்றும் காணிகள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளப்பட்ட மேலதிக பதவியணி தொடர்பிலான அறிக்கையொன்று 2022.05.24 ஆம் திகதி அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரித்துள்ளதுடன் அதனை எதிர்காலத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2002 - 2004 காலப்பகுதியில் அகற்றப்பட்ட 40 காணிகள் தொடர்பிலான அறிக்கை ஒன்றினை தயாரித்து பொது முயற்சிகள் குழுவில் சமர்ப்பித்துள்ளதுடன் எஞ்சிய காணிகள் தொடர்பில் பல மட்டத்தில் தகவல்கள் சேகரிக்கப்பட்டவாறு உள்ளன. இது தொடர்பில் அமைச்சரவை பத்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் கிடைக்கும் அறிவுரைகளுக்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். காணிகள் பதிவேட்டினை தயாரித்த பின்னர் சொத்துக்கள் மீள் மதிப்பிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் சிக்கல்கள் தீர்க்கப்பட்டவாறு உள்ளது. | அறிக்கையிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 151,738,564 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 419,612,386 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 267,873,822 ஆன மிகைகளிலான குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த குறைவிற்கு நிர்வாகச் செலவினம், விநியோகச் செலவினம் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் முறையே ரூபா 302,490,906, ரூபா 15,554,581, ரூபா 15,342,692 இனால் அதிகரித்தமை மற்றும் நிதி வருமானம் ரூபா 49,996,061 இனால் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் காணி விற்பனை வருமானம், காணி பயன்பாட்டு வருமானம் மற்றும் கருங்கல் குத்தகை வாடகை வருமானம் முறையே 33, 76 மற்றும் 97 சதவீதங்களினால் அதிகரித்து இருந்தடிபோது காணி குத்தகை வாடகை வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் முறையே 15 மற்றும் 33 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மிகையூதிய செலவினம், வாகன பழுதுபார்த்தல் செலவினம், போக்குவரத்து படிகள், எரிபொருள் படிகள், வாகன வாடகை செலவினம் மற்றும் சட்ட செலவினம் 84 சதவீதத்திலிருந்து 5074 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரித்திருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 29 : 1 ஆகக் காணப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் அந்த விகிதமானது 38 : 1 ஆகும். அதற்கமைய நடைமுறை விகிதம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக குறைவான பெறுமதியில் பேணி செல்லப்பட்டிருந்த போதிலும் செயற்படு மூலதன தேவை பாடுகளுக்கு அதிக நடைமுறை சொத்துக்களில் பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2020 ஆம் ஆண்டில் 8 சதவீதமாக காணப்பட்ட தகவல் திறன் விகிதம் மீளாய்வாண்டளவில் 11 சதவீதம் வரை அதிகரித்திருந்த போதிலும் ஆணைக்குழுவினால் மொத்த பொறுப்புக்களை தீர்ப்பதற்கு தேவையான அளவினை விட உரித்து மூலதனம் பேணி செல்லப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்காக காணிகள் பதிவேடு ஒன்றினை தயாரிக்கும் தேவைப்பாட்டின் அடிப்படையில் மீளாய்வண்டினுள் ரூபா.19,793,965 ஆன வாடகை மற்றும் எரிபொருள் செலவினம் மேற்கொள்ளப்பட்டு 10 வாடகை கப் வண்டிகள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணிகள் பதிவேடு நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை. | மாவட்ட அலுவலகங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற காணி தகவல்களை திட்டவட்டமாக இனங்காணுவதற்கு களகடமைகளை ஈடுபட வேண்டிய காரணத்தால் நிறுவனத்தில் நிலவிய கடமைகள் வாகனங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்பட்டமையால் இவ்வாறு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை ஈடுபடுத்தி அக்கடமைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக | வளங்களை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமானதாகவும் சிக்கனத்துடன் ஈடுபடுத்தி குறித்த பணியை துரிதமாக நிறைவு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆணைக்குழுவினால் பேணிச் செல்லப்படும் சேதன பசளை செயற்திட்டத்தின் கடமைகளுக்காக வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்களும் ஈடுபடுத்துவதற்கு நேர்ந்ததாக குறிப்பிட்டு கொள்கின்றேன். மேலும் கொவிட் தொற்று நோய் நிலமை காரணமாக மீளாய்வாண்டினுள் காணிகள் பதிவேட்டினை தயாரிக்கும் பணிகள் நிறைவு செய்ய முடியாது இருந்தது. | |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பதுளை மாவட்டத்தின் ஆலிகல பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கிலென் எல்பின் தோட்டம் எனும் காணியில் 04 ஏக்கர் 02 ரூட் அளவானது 1978 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலும் சுமார் 31 வருடங்கள் ஸ்ரீ காளி அம்மன் கோவிலால் அத்துமீறி பயன்படுத்தப்பட்டுள்ளமையால் 2009 ஆம் ஆண்டில் நிர்வாக கட்டணங்களை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டமை மற்றும் கோயில் நிர்வாகத்திற்கு சபையினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த கட்டணங்களை கணிப்பிட்டு கோவிலுக்கு அறிவிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2009 ஆம் ஆண்டில் கோவில் வளாகத்தில் அமைந்துள்ள 2 ஏக்கர்கள் பரப்பளவான காணியை விற்பதற்கும் மேலும் 4.2 ஏக்கர் பரப்பளவான காணியை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரியதாக 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட | 2009 ஆம் ஆண்டு முதல் அரசின் பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் காணி குத்தகையினை கணிப்பிட்டு கோவில் நிர்வாக சபைக்கு அறிவித்திருந்த போதிலும் பணம் செலுத்தப்பட்டிராததுடன் கொவிட் தொற்றுநோய் நிலமை காரணமாக குத்தகை தொகையில் 50% சதவீதத்தினை குறைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய காணியின் அபிவிருத்தி பணிகள் இதுவரையிலும் இடம்பெற்றிராமையால் காணியின் நடைமுறை பயன்பாடு மாவட்ட பணிப்பாளருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2022.10.05 ஆம் திகதி ஸ்ரீ காளி அம்மன் கோயில் நிர்வாக சபைக்கு அறிவித்திருந்த போதிலும் அவ்வாறு உரித்தினை கையளிப்பு செய்தல் ஒன்று இடம்பெறாது இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு 2022.10.31 ஆம் திகதி காணிகள் சீர்திருத்த ஆணைக் குழுவின் தலைமை | நிர்வாக கட்டணங்கள் மற்றும் குத்தகை நிலுவை பணம் உள்ளடங்களாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய ரூபா.6,043,499 ஆன காணிகள் குத்தகை தொகை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அலுவலகத்திற்கு வருகை தந்துள்ளார். அக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டவாறு குத்தகை கொடுப்பனவுகளுக்கு உரிய முன்மொழிவு கோவையொன்று 2022.11.05 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த முன்மொழிவு கோவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானம் ஒன்று எடுக்கப்பட உள்ளது. | |
| (ஆ) | கேகாலை மாவட்டத்தின் மாவனல்ல பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள கொட்டகலவத்த எனும் பெயருடைய காணியில் 75 ஏக்கர்கள் செல்லுபடியான உடன்படிக்கை ஒன்றை பிரீத்திபுற சிறுவர் இல்லத்திற்கு 30 வருட குத்தகை காலத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த குத்தகை காலம் 2009 ஆம் ஆண்டில் நிறைவடைந்திருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டு முதல் செல்லுபடியான உடன்படிக்கையொன்றினை கைச்சாதிடாது குறித்த காணியை பயன்படுத்துவதற்கு ஆணைக்குழு இடமளித்திருந்தது. மேலும் அந்த குத்தகையாளரிடம் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலுவையாக காணப்பட்ட ரூபா.15,272,260 ஆன குத்தகை தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது பெறவேண்டிய நிலுவை குத்தகை வருமானம் ரூபா.6,581,479 வரை குறைவடைந்திருந்தது. | 2021.11.08 ஆம் திகதி தலைமை அலுவலகத்திற்கு வரவழைத்து மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் 2009 ஆம் ஆண்டு முதல் குத்தகை தொகையை செலுத்துவதாக இணங்கி இருந்த போதிலும் அத்தொகையினை செலுத்தாமை மற்றும் மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய குத்தகை விகிதத்தை 2% கீழ் 2009 ஆம் ஆண்டு முதல் குத்தகைக்கு வழங்குவதற்கும் நிலுவை குத்தகை பணத்தை 10 வருட காலத்தினுள் அறவிடுவதற்கும், குத்தகை உடன்படிக்கையை வழங்கும் போது நிலுவை குத்தகை தொகை உள்ளடக்குவதற்கும், 03 வருட காலத்தினுள் காணிகளை அபிவிருத்தி செய்வதற்கும், பிரீத்திபுற சிறுவர் இல்லத்தின் நிர்வாக சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அறிவிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2022.10.06 ஆம் திகதி பிரீத்திபுற சிறுவர் இல்லத்தின் பணிப்பாளருக்கு 11885 ஆம் இலக்க ஆணைக்குழு தீர்மானம் மற்றும் 2022.12.10 ஆம் திகதியில் உள்ளபடியான நிலுவை குத்தகை தொகை ரூபா.6,581,479 என | காணிகளை செல்லுபடியான உடன்படிக்கைக்கமைய குத்தகைக்கு வழங்க வேண்டியதுடன் நிலுவை குத்தகை பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பெற வேண்டிய தொகை பதிவழிக்கப்பட்டால் நி.பி.113 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (இ) | காலி மாவட்டத்தின் மாகேனதன்ன தோட்டம் காணியின் 10 ஏக்கர்கள் அளவானது என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா கடன் முன்மொழிவு முறையின் கீழ் வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றிற்காக “அல்பிடிய மேல் பிரதேசத்தில் சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் சமூக நலன்புரி சங்கம்” இற்கு வழங்கப்பட்டமைக்கு மேலதிகமாக உடன்படிக்கையின் மூலம் குறித்த காணியின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா.1.000,000 ஆன முற்பண தொகை ஒன்று ஆணைக்குழுவினால் 10 சதவீத வருடாந்த வட்டிக்கு 6 மாதங்களினுள் மீள செலுத்தும் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த வீடமைப்பு செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன் முற்பணத் தொகை மற்றும் வட்டியினை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த காணியின் ஒரு பகுதி அல்பிட்டிய, மேல், அமுனுமாவத்த, சுய தொழில் ஈடுபட்டுள்ளோரின் சமூக நலன்புரி சங்கத்தின் கோரிக்கையின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் காணிகள் சீர்திருத்த அதிகாரச் சட்டத்தின் 44 ஏ பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுத்து குறித்த தரப்பினருடன் சட்ட ரீதியான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் உத்தேச தொகையினை விடுவிப்பதற்கு தீர்மானித்து அதற்கமைய சுமார் 10 இலட்சம் தொகை 2019.03.26 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் காணியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறான போதிலும் குறித்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய இச்சங்கத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு அழைப்பானை ஒன்று 2021.11.11 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளதுடன் பணம் செலுத்தாத காரணத்தால் கடுவல மாவட்ட நீதிமன்றத்தில் 8080/M வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் அந்த வழக்கு 2022.11.24 ஆம் திகதி சம்மன் பதிவுகளுக்கா மேன்மைதங்கிய நீதிமன்றத்தில் அழைக்கப்பட உள்ளது. | காணியை மீள சுவீகரித்து அதிகாரச் சட்டத்தின் நோக்கத்திற்காக ஈடுபடுத்தி கடன் அடிப்படையில் வழங்கிய ரூபா.1,000,000 ஆன தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கிரிமுட்டிவத்த எனும் பெயருடைய காணியில் 04 ஏக்கர்கள் தனியார் கம்பெனி ஒன்றுக்கு 30 வருட காலத்திற்காக 2011 ஆம் ஆண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தை நடாத்திச் செல்வதில் நிலவிய சிக்கல்கள் காரணமாக காணியின் | 2016.02.22 ஆம் திகதி முதல் 2018.08.11 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் உற்பத்தி நடைமுறையில் ஈடுபட்டிராத காரணத்தால் நிலுவை குத்தகை பணத்தை செலுத்துவதிலிருந்து விடுவிப்பதற்கு 2018.08.02 ஆம் திகதி இடம்பெற்ற 712 ஆவது ஆணைக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஆணைக்குழுவிற்கு காணியை சுவீகரிப்பதற்கு மற்றும் நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரித்திணை மீள பெற்றுக் கொள்ளுமாறு கம்பெனியால் 2016 ஆம் ஆண்டில் 02 சந்தர்ப்பங்களில் கடிதங்களின் ஊடாக சபைக்கு அறிவித்திருந்த போதிலும் குறித்த காணியை ஆணைக்குழுவிற்கு சுவீகரிப்பதற்கோ அல்லது ரூபா.2,139,879 ஆன நிலுவை பணத்தை அறவிடுவதற்கோ ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (உ) | மாத்தளை மாவட்டத்தின் பள்ளேபொல பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அக்குரம்வட தோட்டம் எனும் பெயருடைய காணிக்குரிய 2011/133 ஆம் இலக்கமுடைய காணி வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணித் துண்டில் காண்பிக்கப்படும் 02 ஏக்கர் 03 ரூட் 37.13 பேர்ச் பரப்பளவான காணி பள்ளேபொல பிரதேச சபைக்கு விளையாட்டு திடல் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக 2007 ஆம் ஆண்டு முதல் 30 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக அறவிடப்பட வேண்டிய ரூபா.2,242,000 ஆன நிலுவை குத்தகை தொகையை அறவிடுவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022.01.11 ஆம் திகதி ஆணைக்குழு பத்திர இலக்கம் 11683 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த காணியை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்து காணியை அகற்றுதல் தொடர்பில் 2021/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04(இ) 1 இன் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு காணிகளை வழங்கும் போது வீதவரி எல்லைக்கு வெளியே அமைந்துள்ள விளையாட்டு திடல்களுக்காக 1 பேர்ச் ரூபா.100 படி அறவிட்டு விற்பனை செய்து சாட்டுதல் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிட்டு 2022.10.17 ஆம் திகதி உரித்துறுதியை தயாரிப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே ஆணைக்குழுவிற்கு பெறவேண்டிய நிலுவை குத்தகை பணத்தை அறவிடுவது அவசியமற்றது என ஆணைக்குழு தீர்மானித்துள்ளதுடன் அதற்கமைய 2022.12.31 ஆம் திகதியில் உள்ளபடியான கணக்கு அறிக்கைகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | உரிய ஏற்பாடுகளின் கீழ் மாத்திரம் காணிகள் சுவீரிக்கப்பட வேண்டியதுடன் நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நிலுவை பணம் பதிவழிக்கப்பட்டால் அது நி.பி.113 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | களுத்துறை மாவட்டத்தின் காலவிலவத்த காணியில் 02 ரூட் 9.94 பேர்ச் பரப்பளவான | வரைபட இலக்கம் 390 இன் காணித் துண்டு இலக்கம் 10 இல் அத்துமீறிய வகையில் | உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைய குறித்த |

| | | | |
|---|---|---|---|
| | காணித்துண்டு சுற்றுலா விடுதி நிர்மாணிப்பதற்காக 2001 செப்டம்பர் 19 ஆம் தேதி 8502 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் மூலம் தனியார் கம்பெனி ஒன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கைக்கமைய குத்தகையாளரால் ஒவ்வொரு வருடத்தினதும் ஜூலை 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் குத்தகை வாடகை செலுத்தப்பட வேண்டிய போதிலும் குறித்த கம்பெனியால் 2002 ஆம் ஆண்டு முதல் குத்தகை தொகை செலுத்தாது புறக்கணிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய குத்தகையாளரால் குத்தகை உடன்படிக்கையின் நிபந்தனைகள் மீறப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் 06 மாதங்களுக்கு முன்னர் எழுத்து மூலம் குத்தகையாளருக்கு அறிவித்து குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்வதற்கு மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக காணப்பட்ட ரூபா.27,945,900 ஆன நிலுவை குத்தகை அறவிடுவதற்கும் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தமது இருப்பில் வைத்திருக்கும் சந்தலு இன்டர்நேஷனல் கம்பெனியை அகற்றுவதற்கு அகற்றுதல் அறிவித்தல் ஒன்று 2022.05.31 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த வரைபடத்தின் 11 ஆம் இலக்க காணித் தூண்டில் அத்துமீறி குடியிருப்பவரை அகற்றுவதற்கு களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் 30571 ஆம் இலக்க வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு 2022.12.02 ஆம் திகதி மீள அழைக்கப்படவுள்ளது. | உடன்படிக்கையை இரத்து செய்வதற்கும் நிலுவை குத்தகை பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | ஆணைக்குழுவிற்காக முழுமையான ஒருங்கிணைக்கப்பட்ட கணினி கட்டமைப்பு ஒன்றினை நிர்மாணித்தல் அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக 2002 ஆம் ஆண்டில் தனியார் கம்பெனி ஒன்றுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா.17,000,000 ஆன தொகையை மீள பெறுவதற்கோ அல்லது குறித்த கணினி கட்டமைப்பினை நிறுவுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பில் 2016.08.21, 2018.08.31, 2021.07.27, 2022.10.17 ஆகிய திகதிகளில் விரிவான கடிதங்களை அனுப்பி வரிசை அமைச்சின் ஊடாக பொது திறைசேரியில் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் கோரப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் இதுவரையிலும் அது தொடர்பில் திட்டவட்டமான தீர்வொன்று வழங்கப்படவில்லை. 2022.10.21 ஆம் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவில் வரிசை அமைச்சின் செயலாளருக்கு இது தொடர்பில் முறையான | முழுமையான ஒருங்கிணைந்த கணினி கட்டமைப்பு ஒன்றினை நிர்மாணித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விசாரணை மேற்கொண்டு உரிய மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஏ) | சபையின் காணிகளை அளவிட்டு சட்டரீதியாக்கும் சந்தர்ப்பத்தில் துண்டிடப்பட்டவர்களிடமிருந்து மீளளிப்பு செய்வதற்கு இணங்க காணியின் அளவீட்டு நடவடிக்கைகள் அதிகாரம் பெற்ற அளவீட்டாளர் ஒருவருக்கு 2019, 2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா.33,229,487 ஆன தொகையில் அந்த காணியின் துண்டிடப்பட்டவர்களுக்கு சாட்டுதல் செய்யப்பட்டிராத காரணத்தால் மீளாய்வாண்டினுள் ரூபா.1,140,337 மாத்திரம் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. | இந்த அளவீட்டு பணிகள் 2017.11.23 ஆம் திகதி இடம்பெற்ற 9980 ஆம் இலக்க ஆணைக்குழு கூட்டத்தில் ஆணைக்குழு பத்திரத்திற்கு உரியதாக வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2022.09.30 ஆம் திகதியளவில் இந்த அளவீட்டு நடவடிக்கைகளுக்கு உரிய துண்டிடப்பட்டவர்களிடமிருந்து அறவிடப்பட்டுள்ள மொத்த தொகை ரூபா.7,804,780 ஆகும். எஞ்சிய தொகையை துண்டிடப்பட்டவர்களிடமிருந்து அறவிடப்பட்டவாறு உள்ளது. | குறித்த காணியை துண்டிடப்பட்டவர்களுக்கு சாட்டுதல் செய்யும் நடவடிக்கையை செயற்திறனாக மேற்கொண்டு அளவீட்டு கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 1.1 இன் பிரகாரம் அரச சேவையில் பதவி ஒன்றினை வகிக்கும் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அரச சேவையின் மற்றுமொரு பதவியினை பொறுப்பேற்பதற்கு தாம் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறல்லாது உத்தியோகத்தர் ஒருவர் 2020 அக்டோபர் 23 ஆம் திகதி முதல் 2022 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் செயற்திட்ட பணிப்பாளர் பதவியில் சேவையாற்றியவாறு உள்ள போது 2021 ஜனவரி 01 ஆம் திகதி முதல் மகநெகும வீதி நிர்மாண இயந்திர கம்பெனியின் பிரதி பொது முகாமையாளர் (நிர்வாகம்) பதவிக்கு ஒரு வருட தகுதிக்கான காலம் உள்ளடங்களாக நிரந்தர அடிப்படையில் சேவையில் இணைத்துக் | 1972 இன் 1 ஆம் இலக்க காணிகள் சீர்திருத்த அதிகாரச் சட்டத்தின் 47(3) பிரிவின் கீழ் அமைச்சருக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் சட்டத்தரணி பி.ஏ.அசித்த குமார என்பவர் செயற்திட்ட மற்றும் புலனாய்வு பணிப்பாளராக இணைத்துக் கொள்ளப்பட்டு வருகை விபரங்கள் மற்றும் நிகழ்ச்சி திட்ட விபரங்களின் அடிப்படையில் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளது. குறித்த உத்தியோகத்தர் மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண கம்பெனியில் சேவையாற்றியமை மற்றும் அதற்குரிய தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு 2022.10.27 மற்றும் 2022.11.15 ஆம் திகதிகளில் கடிதங்களின் மூலம் கோரியுள்ளதுடன் இதுவரையிலும் அதற்கான பதில் கிடைக்கவில்லை என்பதுடன் அத்தகவல்கள் கிடைத்த பின்னர் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்து தீர்மானம் ஒன்றினை | குறித்த உத்தியோகத்தரின் சேவைக்கு வருகைதரல் தொடர்பில் மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண கம்பெனியில் சான்றுபடுத்தலை பெற்றுக் கொள்ளல் மற்றும் கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள சம்பளம் மற்றும் படிகளை மீள அறவிடல் போன்றே தாபன விதி கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்டிருந்தார். ஒரே காலத்தில் 02 நிறுவனங்களில் பெற்றிருந்த சம்பளம் மற்றும் படிகளின் பெறுமதி ரூபா.4,347,460 ஆக காணப்பட்டது. அதற்கமைய ஆணைக்குழுவினால் குறித்த உத்தியோகத்தரின் வருகை மற்றும் செயலாற்றல் குறித்து கருத்திற்கொள்ளாது சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | எடுப்பதாகவும் அத் தீர்மானம் எடுக்கப்பட்டவுடன் தங்களுக்கு உடனடியாக அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஒ) | காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஒருங்கிணைந்த கணக்கிட்டு மென்பொருள் கட்டமைப்பு ஒன்று 2019 மே 22 ஆம் திகதி ரூபா.8,500,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த தகவல் கட்டமைப்பின் மூலம் பெற வேண்டிய காணி குத்தகை தொகை தொடர்பிலான தகவல்களை பெற்றுக் கொள்ள மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்கீட்டு மென்பொருள் கட்டமைப்பின் மூலம் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பெற வேண்டிய காணி குத்தகை பணம் தொடர்பில் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாமைக்கு நிறுவனத்தின் குத்தகை பற்றுச்சீட்டுகளை வழங்குதல் தொடர்பில் ஏற்பட்டுள்ள நடைமுறை சிக்கலே காரணமாக அமைந்துள்ளது. அந்த சிக்கலை தீர்த்தல் ஒரு மாத காலமாக மேற்கொள்ளப்பட்டு குறித்த தகவல் கட்டமைப்பின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டிய காணிக் குத்தகை தொகை தொடர்பிலான தகவல்களை பெற்றுக் கொள்ள இயலுமான வகையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒருங்கிணைந்த கணக்கீட்டு மென்பொருள் கட்டமைப்பின் மூலம் உடன்படிக்கை கைச்சாத்திட்ட அனைத்து தகவல்களையும் பெற்றுக் கொள்வதற்கு உரிய வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். |
| (ஓ) | ரூபா.1,218,834 கூட்டுத் தொகையான மீளாய்வாண்டின் மார்ச் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 09 டப்லட் கணினிகள் தொடர்பிலான தகவல்கள் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையினுள் உள்ளடங்கி இருக்காததுடன் குறித்த பொருட்களை விநியோகித்த மற்றும் அவற்றினை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் தொடர்பிலான தகவல்கள் கோவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட 09 டப்லட் கணினிகள் 2021.03.14 ஆம் திகதி நிர்வாகப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த டப்லெட் கணினிகள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட விபரங்கள் உள்ளடங்கிய கோவை ஒன்று நிர்வாகப் பிரிவில் பேணிச் செல்லப்படுகிறது. குறித்த டப்லெட் கணினிகள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமையால் ஆண்டின் இறுதியில் | கொள்வனவு செய்யப்பட்ட டப்லட் கணிணிகளை வழங்கிய உத்தியோகத்தர்கள் தொடர்பிலான விபரங்களை கோவைப்படுத்த வேண்டியதுடன் பொருட் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளபடியான பொருள் மெய்மையாய்வில் அது தவறுதலாக கைவிடப்பட்டுள்ளது. மேலும் 2022 ஆம் ஆண்டின் முடிவடைந்த ஆண்டிற்கான பொருள் மெய்மை ஆய்வில் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஔ) | ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டினுள் ரூபா.11,777,501 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 53 மடிக்கணினிகள் உள்ளடங்களாக மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக 59 மடிக்கணினிகள் காணப்படுவதாக நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட போதிலும் அத்திகதியில் உள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கைக்கமைய ஆணைக்குழுவிற்கு சொந்தமான 27 மடிக்கணினிகள் காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அதற்கமைய 30 மடிக்கணினிகளின் வேறுபாடொன்று நிலவியது. | மடி கணினிகளுக்கு உரிய குறியீடுகள் சிதைவடைந்தமை மற்றும் கழன்று போயுள்ள காரணத்தால் இயந்திரங்களுக்கு உரிய குறியீடுகளை வாசிக்க முடியாது உள்ளமையால் எமது தகவல் கட்டமைப்பில் அந்த 30 கணினிகளும் உள்ளடக்கப்படவில்லை. எனினும் பௌதிக ரீதியில் 59 கணிணிகள் உள்ளன. இந்நிலைமையை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருள் மெய்மையாய்விற்கு அனைத்து கணினிகளும் முன்வைக்கப்பட வேண்டும். |
| (க) | ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தினை நடாத்தி செல்வதற்கு 2016 டிசம்பர் 01 ஆம் திகதி முதல் 2017 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் ஒரு வருட காலத்திற்காக பத்திரமுள்ள பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் கம்பெனி ஒன்றிற்கு உரிய கட்டிடம் ஒன்று வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த உடன்படிக்கை நீடிக்கப்படாது ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் அந்த கட்டிடத்திலேயே நடாத்திச் செல்லப்பட்டு அரச மதிப்பீட்டாளரின் பெறுமதியிலும் ரூபா.29,937,867 அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைய குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் குறித்த குத்தகை உடன்படிக்கையின் காலம் 2017.11.30 ஆம் திகதி நிறைவடைந்துள்ளது. மற்றுமொரு இடத்தினை தேடி கண்டறிய முடியாமையின் அடிப்படையில் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய 5 சதவீத அதிகரிப்புடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாடகை அடிப்படையில் கட்டிடம் ஒன்றினை பெற்று கொள்வதற்கு பெறுகை நடைமுறையை கருத்தில் | அரச செலவினங்கள் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமானதாகவும் சிக்கனமானதாகவும் மேற்கொள்ள வேண்டியதுடன் அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய செலவினங்கள் முகாமை செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்ள வேண்டிய காலம் கடந்திருந்தமையால் இந்த கட்டிடம் மேலும் ஒரு வருடத்திற்கு முறையான குத்தகை உடன்படிக்கையின் கீழ் பெற்றுக்கொள்ள அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்ட அமைச்சரவை பத்திரம் ஒன்று வரைபாக்கப்பட்டு 2022.11.16 ஆம் திகதி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (கா) | 1972 இன் 01 ஆம் இலக்க காணி சீர்திருத்த அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய 50 ஏக்கர்களுக்கு அதிகமான காணியை உரித்தாக கொண்ட நபர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு காணியை சுவீகரித்தலின் கீழ் 1972 - 1974 இடைப்பட்ட காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட 260 வெளியீடுகளுக்காக மீளாய்வாண்டின் இறுதி அளவில் 48 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் நியதி சட்ட தீர்வினை வழங்க முடியாதிருந்தது. | பொது முயற்சிகள் குழு 2021.11.17 ஆம் திகதி வழங்கிய அறிவுரைக்கமைய நீதி சட்ட தீர்வினை வழங்காது 260 கோவைகளுக்கு உரிய வெளியீடுகளை அறிவிப்பதற்காக மும்மொழிகளிலும் 2022.04.11 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டதுடன் அரசின் 2282 ஆம் இலக்க மற்றும் 2022.05.27 ஆம் திகதிய வர்த்தமானியின் மூலமும் அறிவித்து 2022.06.30 ஆம் திகதிக்கு முன்னர் காணியின் உச்ச எல்லைகள் பிரிவிற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் போது பதில் தெரிவித்த 38 பேருக்கு உரியதாக மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன் வர்த்தமானியில் பிரசுரிக்க கூடிய எண்ணிக்கையான 05 இல் ஆகக் கூடியதுக்கு குறைவான 01 எண்ணிக்கை மற்றும் உரித்தினை பார்ப்பதற்கு அனுப்பப்பட்ட எண்ணிக்கை 01 ஆகும். மீள கிடைக்கப் பெற்ற கடிதங்களின் எண்ணிக்கை மற்றும் பதில் கிடைக்காத 215 கோவைகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுத்தல் பிரச்சினைக்குரியது ஆகும். இதுவரையிலும் சட்ட கடப்பாடுகளுக்கு உரிய 51 சிக்கல்களுக்கு உரிய பரிந்துரைகள் | காணி சீர்திருத்த அதிகாரச் சட்டத்திற்கமைய அரசாங்கத்திற்கு சுவீரிக்கப்பட்ட காணிகளுக்கு உரிய நியதி சட்ட தீர்வினை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரையிலும் ஆணைக்குழுவிற்கு சொந்தமாக காணப்படுவதாக களத்தில் இனங்காணப்பட்டுள்ள காணிகள் தொடர்பான தகவல்கள் கூற்றின் மூலம் வழங்கப்பட்டு சட்டக்கடப்பாடு அளவுகளில் ஓரளவையேனும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (கி) | களுத்துறை மாவட்டத்தின் ஹேகல்ல வத்த எனும் காணியில் 10 ஏக்கர்கள் தேயிலை பயிரிடும் செயற்திட்டத்திற்காக நபர் ஒருவருக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 8393 ஆம் இலக்க மற்றும் 2013.04.30 ஆம் திகதிய ஆணைக்குழு பத்திர தீர்மானத்திற்கு அமைய சபை நடவடிக்கை எடுத்திருந்தது. 2011 ஆம் ஆண்டு முதல் இந்த காணிக்குரிய எந்த குத்தகை தொகையும் குறித்த குத்தகையாளர் செலுத்தியிராததுடன் செல்லுபடியான உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமை விபரத்தின் பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா.2,560,000 ஆன தொகையை அறவிடுவதற்கோ அல்லது காணியை சுவீகரிப்பதற்கோ ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | களுத்துறை மாவட்டத்தின் ஹகல்லவத்த காணியின் 10 ஏக்கர் பரப்பளவான காணிக்காக குத்தகை தொகை தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் குறித்த குத்தகையாளரால் பயிரிடப்பட்டு பயன்படுத்தப்படும் காணிப்பகுதி 2018.06.19 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள அளவீட்டு கட்டளைக்கமைய அளவிடப்பட்டுள்ள 3396 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் 04 ஏக்கர்கள் என்பது தெளிவாகின்றது. அதற்கமைய மேலே குறிப்பிடப்பட்ட குத்தகை தொகையை அறவிட முடியாமையால் 11836 ஆம் இலக்க மற்றும் 2022.04.26 ஆம் திகதிய ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 04 ஏக்கர் பரப்பளவான காணியில் பயன்பாட்டிற்கு வந்து 05 வருடங்கள் முதல் ஒவ்வொரு 05 வருடத்திற்கும் திருத்தத்திற்கு உள்ளாகும் வகையில் 30 வருட குத்தகை காலத்திற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அரசின் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டினை பெற்றுக் கொள்வதற்கு 2022.05.06 ஆம் திகதி அரசின் விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைய அரசின் மதிப்பீடு 2022.10.26 ஆம் திகதி கிடைத்துள்ளதுடன் 2022.11.14 ஆம் திகதி குத்தகையாளருக்கு குத்தகை | முறையான குத்தகை உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையில் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கும் நிலுவை குத்தகை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. | |
| (கீ) | காணி சீர்திருத்த அதிகார சட்டத்தின் 22(1)(ஆ) பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தின் அக்னிமனப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள லேச்சம்வீவத்த எனும் பெயருடைய காணியில் 08 ஏக்கர்கள் 30 வருட காலத்திற்கு 5 வருடங்களுக்கு ஒரு தடவை 5 வருடங்களில் குத்தகை மீளாய்வு செய்யப்பட்டு 2005 ஆம் ஆண்டில் மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் 2005 ஆம் ஆண்டு முதல் “சஹான சிறுவர் அபிவிருத்தி மன்றத்திற்கு” குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 2014 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் குறித்த காணி தொடர்பில் சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டு காணியின் உரித்தினை ஒரு தலைப்பட்சமாக ஆணைக்குழுவிற்கு 2021 ஆம் ஆண்டில் சுவீகரித்துள்ளதாக கணக்காய்வுக்கு அறிக்கை இடப்பட்டு இருந்தது. மேலும் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி அளவில் நிலுவையாக காணப்பட்ட ரூபா.6,509,200 ஆன தொகையை அறவிடுவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த குத்தகைக்காக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை வழங்குவதற்கு 2014 ஆம் ஆண்டு வரையிலும் தாமதமடைந்தமைக்கு உரிய தகவல்கள் கோவைக்கமைய தேடிக் கண்டறிய முடியாதுள்ளதுடன் குத்தகையாளரான சங்கைக்குரிய கேகாலை உடுவேவல பஞ்ஞாராம சுவாமிகளுக்கு 2020.05.18 ஆம் திகதி மரணம் அடைந்துள்ளமையால் குத்தகை உடன்படிக்கை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குத்தகையாளர் மரணம் அடைந்துள்ளமையாலும் காணியின் ஒரு பகுதியினுள் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டவாறு காணப்பட்டமையாலும் குறித்த காணியின் ஒரு பகுதியின் உரித்தினை ஆணைக்குழுவிற்கு பொறுப்பேற்க தீர்மானிக்கப்பட்டு 2021.07.28 ஆம் திகதி காணியின் நடைமுறை உரித்து ஒருதலைப்பட்சமாக பொறுப்பேற்கப்பட்டுள்ளது. | சுவீகரிக்கப்பட்ட காணி காணி சீர்திருத்த ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் நோக்கங்களுக்கு ஈடுபடுத்த வேண்டியவுடன் நிலுவை குத்தகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (கு) | ஆணைக்குழுவினால் செயற்திட்டம் மற்றும் புலன்விசாரணை பணிப்பாளர், செயற்திட்ட இணைப்பாளர், விசாரணை உத்தியோகத்தர், சட்ட மதியுரையாளர் மற்றும் சட்டத்தரணி ஆகிய சேவைகள் சேவை உடன்படிக்கையின் அடிப்படையில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு 14 பேர் மீளாய்வாண்டில் ஆணைக்குழுவினால் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த | 1972 இன் 01 ஆம் இலக்க அதிகார சட்டத்தில் ஆணைக்குழு தொடர்பில் அமைச்சருக்கு உள்ள அதிகாரங்களுக்கு அமைய அச்சட்டத்தின் 47(3) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பில் விசாரித்து அறிக்கை இடுவதற்கு நபர் ஒருவர் / பெண் ஒருவரை நியமிப்பதற்கு உள்ள அதிகாரத்திற்கமைய வினாவில் குறிப்பிடப்பட்ட 14 பேரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் | பல்வேறு சேவைகளை பெற்றுக் கொள்ளும்போது குறித்த தரப்பினருடன் சேவை உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கும் குறித்த சேவையினை உரிய காலத்தினில் நிறைவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செயலாற்றல் |

| | | | |
|---|---|---|---|
| | சேவை உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதற்கமைய திட்டவட்டமாக சாட்டப்பட்ட கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளாது மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆம் திகதி அளவில் ரூபா.14,853,725 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அதிகாரச் சட்டத்தின் 47(3) பிரிவுக்கமைய அவர்களுக்குரிய வசதிகளை வழங்குவதற்கு வசதிகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட வேண்டும். அதற்கமைய 11273 ஆம் இலக்க ஆணைக்குழு பத்திரத்தின் மூலம் குறித்த பதவிகள் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிட்டுள்ளதுடன் 2020.12.31 ஆம் திகதி கிடைத்த ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய வினாவில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய காணி சீர்த்திருத்த ஆணைக்குழு தொடர்பில் அமைச்சருக்கு உள்ள அதிகாரத்திற்கு அமைய குறித்த நியமனம் பெறுநருக்கு அமைச்சரால் (திட்டவட்டமாக) சாட்டப்படும் கடமைகள் தொடர்பில் விசாரணை செய்து குறித்த அறிக்கைகள் அமைச்சருக்கு அனுப்பப்படும். எவ்வாறான போதிலும் குறித்த நியமனங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளமையால் அவ்வப்போது அவர்களுக்கு பல்வேறு கடமைகள் ஆணைக்குழுவினால் சாட்டப்பட்டுள்ளன. | தொடர்பிலும் அறிக்கைகளை பேணுவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கூ) | தலைவர் மற்றும் நிறைவேற்று பணிப்பாளர் பதவிகளுக்காக வீட்டு மற்றும் உபசரணை படிகளுக்காக உரித்தற்ற போதிலும் அதற்கு முரணாக சபையினால் மீளாய்வாண்டில் ரூபா.1,200,000 வீடு மற்றும் உபசரணை படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த கொடுப்பனவுகளை செலுத்துதல் தொடர்பில் கணக்காய்வு ஐயவினாவில் சமர்ப்பித்த காரணத்தால் 2021.12.07 ஆம் திகதி இது தொடர்பில் 11646 ஆம் இலக்க ஆணைக்குழு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்த ஆணைக்குழு தீர்மானத்திற்கு அமைய கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் குறித்த படிகளை செலுத்துதல் தற்காலிகமாக நிறுத்துவதற்கும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பரிந்துரைகளை பெற்று மேலதிக நடவடிக்கைகளை | முறையான அங்கீகாரத்துடனான படிகள் மாத்திரம் செலுத்தப்பட வேண்டியதுடன் செலுத்தப்பட்ட அங்கீகரிக்கப்படாத படிகள் மீள அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. அதன்போது காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் நிறைவேற்று பணிப்பாளர் ஆகிய பதவிகளில் உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ இல்ல வசதிகள் உரித்தற்றது எனவும் வீடு மற்றும் உபசரணை படிகளை செலுத்துதல் தொடர்பில் இணங்க முடியாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மீண்டும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு மேன்முறையீடொன்று சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழு அறிவுரை வழங்கியுள்ளது. அதற்கமைய இந்த படிகளை செலுத்துதல் தொடர்பில் 2022.04.06 ஆம் திகதி மீண்டும் பொது முயற்சிகள் திணைக்களத்தில் கோரப்பட்டுள்ளது. | |

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டங்களை நடாத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய (Zoom போன்ற) மென்பொருட்களை இணையதளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கக்கூடியதாக உள்ளபோது அவ்வாறு செய்யாது மீளாய்வாண்டின் அக்டோபர் 21 ஆம் திகதி ரூபா.1,160,000 செலுத்தி கூட்டம் நடாத்துவதற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த “Board Pac” மென்பொருள் அந்த நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்படாத காரணத்தால் அதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த தொகை விளைவற்ற கிரயமாக மாறியிருந்தது. | பொதுவான கூட்டங்களை நடத்தும் பணிகளுக்காக “Zoom” போன்ற இணையதள மென்பொருட்களை இலவசமாக பதிவிறக்கும் இயலுமை காணப்பட்ட போதிலும் “BoardPac” மென்பொருளின் மூலம் அதற்கு மேலதிகமாக விசேடமான பணிகள் அந்த மென்பொருளின் பயன்பாட்டில் மேற்கொள்ள இயலுமை உள்ளது. அதாவது பணிப்பாளர் சபை பத்திரங்களை பதிவேற்றுதல், அந்த பத்திரங்களை பரீட்சித்தல் மற்றும் திருத்துதல், டிஜிட்டல் கையொப்பமிடல், நிகழ்ச்சி நிரல்களை தயாரித்தல், கூட்டக்குறிப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பரிமாறிக் கொள்வதற்கும் இயலுமை | கிரய நலனை மதிப்பீடு செய்த பின்னர் இலாபகரமான நோக்கங்களுக்காக சபையின் நிதி செலவிடப்பட வேண்டியதுடன் இந்த மென்பொருளை விளைவற்று காணப்படுவதை தவிர்க்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்படல் ஆகிய வசதிகள் காணப்படுகின்றன. மேலும் இணையதளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கப்படும் Zoom போன்ற மென்பொருள் போன்றவற்றுக்கு ஒப்பாக மேற்படி இரகசிய தன்மை மற்றும் பாதுகாப்பு இந்த மென்பொருளில் காணப்படுகிறது. அதனால் இந்த மென்பொருளுக்காக செலவிடப்பட்டுள்ள தொகை விளைவற்ற கிரயம் அல்ல என்பதை அவதானிக்கின்றேன். | |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமப/18/1126/829/002 ஆம் இலக்க 2018 ஜூன் 27 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய ஆணைக்குழுவிற்கு வருடாந்த சேவை நீடிப்பு செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் 214 ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் அதற்கமைய இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களில் 180 பேர் மீளாய்வாண்டின் இறுதி அளவில் சேவையாற்றியவாறு காணப்பட்டனர். மேலும் குறித்த ஆட்சேர்ப்புகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் அமைச்சின் செயலாளரினால் தலைவருக்கு அனுப்பப்பட்ட 3/1/45 ஆம் இலக்க மற்றும் 2021.12.28 ஆம் திகதிய கடிதத்தின் உப இலக்கம் 02 இன் கீழ் இந்த உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் செயல்முறை கோவையை பின்பற்றி நி.பி. 71 இன் பிரகாரம் அங்கீகரிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய அந்த திணைக்களத்துடன் கலந்துரையாடியுள்ளத்துடன் இறுதியாக 2021.11.03 ஆம் திகதியில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்மைய அந்த ஆட்சேர்க்கப்பட்ட பதவியணி நிரந்தர பதவியணிக்கு இணைப்பதற்கான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றும் சமர்ப்பிப்பதற்கு அதன்போது தீர்மானிக்கப்பட்டது. | குறித்த ஆட்சேர்ப்புகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பின்பற்றப்படும் பதவியணி உள்ளடங்கிய இடைநிலை முகாமைத்துவ மட்டத்திலான 02 உத்தியோகத்தர்கள், 07 முகாமைத்துவ உதவியாளர் | காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் பதவியணியின் தேவைப்பாட்டுக்கமைய பதவியணி மற்றும் அதற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தவரைபொன்று | சேவை தேவைப்பாட்டிற்கமைய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்தி அமைப்பதற்கோ |

| | | |
|---|---|---|
| பதவிகள் மற்றும் ஆரம்ப நிலை மட்டத்திலான ஒரு பதவியும் வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் தேவைக்கமைய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கான அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஆட்சேர்ப்புக்களை மேற்கொண்டு பதவி வெற்றிடங்களுக்காக மற்றும் புதிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்கோ ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜூன் 02 ஆம் திகதிய பீஈடி12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவுக்கமைய பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மீளாய்வாண்டுக்குரிய கூட்டிணைந்த திட்டத்தின் பிரதி ஒன்று அதற்கடுத்த நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழு அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2018 - 2022 ஒன்றிணைந்த திட்டம் பீஏஎல்/ஏ/எல்ஆர்சி/கோ-2022 ஆம் இலக்க மற்றும் 2022.10.13 ஆம் திகதிய கணக்காய்வு ஐயவினாவிற்குரிய பின்னிணைப்பாக தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் இதுவரையிலும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திலிருந்து வளப் பங்களிப்பை பெற்று அந்த 2023 - 2027 கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. அதனை உரிய காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டிணைந்த திட்டத்தை சுழற்சி முறையில் தயாரித்து உரியவாறு அதன் பிரதி ஒன்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். |

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜூன் 02 ஆம் திகதிய பீஈடி12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 இல் குறிப்பிடப்பட்டவாறு காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கை காலாண்டு நிறைவடைந்து 30 நாட்களினுள் வரிசை அமைச்சு, பொது | 2020 ஆம் ஆண்டின் நாட்டினுள் பரவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக கடமைகளை மேற்கொள்வதில் ஏற்பட்ட தடைகளுக்கு மத்தியில் ஆணைக்குழுவின் காலாண்டு ரீதியான செயன் முன்னேற்றம் பொது முயற்சிகள் திணைக்களம் | காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கைகள் உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| முயற்சிகள் திணைக்களம் மற்றும் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டுக்கு உரிய காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கைகள் சுற்றறிக்கைக்கு அமைய சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மற்றும் பொது திறைசேரி ஆகியவற்றுக்கு சமர்ப்பிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டன. எனினும் வரிசை அமைச்சுக்கு காணிகள் அமைச்சினால் அவ்வப்போது விதிக்கப்பட்ட செயன் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களுக்கு காலாண்டு ரீதியான செயலாற்றல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |